# பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-09-08

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்.* 35:4-7,

*பதிலுரைப்பாடல்: திபா.* 146:7-10,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்.* 2:1-5,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 7: 31-37)

*திருப்பலி முன்னுரை*

*நன்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு இயேசுவில் செயல்பட்ட கடவுளின் வல்லமையை உணர நமக்கு அழைப்பு விடுக்கிறது. இறைவாக்கினர்கள் முன்னறிவித்த இறைவாக்குகள் இயேசுவில் நிறைவேறியதை இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றன. அற்புதங்கள் செய்கின்றவராகிய நம் ஆண்டவரை நம்பிக்கையோடு தேடிச் சென்று நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். நமது உடல், உள்ளக் குறைகளை நீக்க அவரால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டுமே கடவுள் எதிர்பார்க்கிறார். நம் ஆண்டவரைப் போன்று பிறருக்கு நன்மை செய்பவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*பரம்பொருளான இறைவா!*

*உம் திருஅவையிலுள்ள திருப்பணியாளர்கள் அனைவரும் பணிவு, தாழ்ச்சி ஆகிய உயரிய நோக்கங்களை தங்கள் சொல்லிலும், செயலிலும் கடைபிடித்து, உம் வர்த்தைகளைப் பிறருக்கு எடுத்துரைக்க வேண்டிய ஞானத்தைப் பொழிந்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கத்தின் இறைவா!*

*இயேசுவின் இரக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுத்த புனித அன்னை தெரசாவைப் போல இரக்கம் நிறைந்தவர்களாய் வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வின் இறைவா!*

*நாம் எந்த நிலையில் இருந்தாலும் இறைவன் நம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிறார். அதுபோல் நிறைகுறையோடு வாழும் மனிதர்களை முழுமையாக ஏற்று அன்பு செய்து வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*பாதுகாக்கும் தெய்வமே இறைவா!*

*நாங்கள் பிறர் துன்பங்களில் பங்கெடுத்து வேதனைகளைப் பகிர்ந்து பாசத்தை வெளிப்படுத்தும் நல்ல மனிதர்களாக வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆறுதலின் தெய்வமே இறைவா!*

*குடும்பங்களிலும் நாம் வாழும் பகுதிகளிலும் ஊன முற்ற சகோதர, சகோதரிகளின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*விடுதலை தருபவராம் இறைவா,*

*தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற் றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*அருளின் ஊற்றாம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்குபவர்களாய் வாழும் அருளை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மேலும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*